# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூலை 16, 2022 Weekly E-paper ● July 16, 2022



## பட்டமளிப்பு மேடையா? பா.ஜ.கவின் பரப்புரை வேலையா?

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## எதிர்ப்பும் இனிப்பும்!

சுப.வீரபாண்டியன்

## இவையென்ன “கெட்ட” வார்த்தைகளா!

தலையங்கம்

## அ.தி.மு.க துடுப்பில்லாப் படகு!

பொள்ளாச்சி மா. உமாபதி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூலை 16, 2022 Weekly E-paper ● July 16, 2022


# பட்டமளிப்பு மேடையா? பா.ஜ.கவின் பரப்புரை வேலையா?

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

இந்திய ஒன்றியத்தில் 2014ஆம் ஆண்டு பா.ஜ.க ஆட்சி அமைந்ததில் இருந்து, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர் மூலம் சிக்கலைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டின் உரிமைகளை ஒன்றிய அரசிடம் அடகு வைத்துத் தங்கள் ஆட்சிக் கட்டிலைக் காப்பாற்றி வந்த பழனிச்சாமி - பன்னீர்செல்வம் காலத்தில், அன்றைய ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அதிகாரத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு மாநிலம் முழுவதும் ஆய்வு மேற்கொண்டார். மாநில சுயாட்சிக்கு எதிரான இச்செயலை வன்மையாகக் கண்டித்த தி.மு.க தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின், இனியும் ஆளுநர் ஆய்வு மேற்கொண்டால் அவர் செல்லும் இடமெல்லாம் தி.மு.க கருப்புக்கொடி காட்டும் என்று அறிவித்தார். அதன் பிறகு அவர் தனது பதவிக் காலம் முடியும் வரை ஆய்வு எதையும் மேற்கொள்ளவில்லை.

ஆளுநராக ஆர்.என்.ரவி பொறுப்பேற்ற பிறகு ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தத்தைப் பரப்பிடும் பணியைத் தீவிரமாக மேற்கொள்ளத் தொடங்கினார். பல்கலைக்கழகங்களில் இணைவேந்தர் பொறுப்பு வகிக்கும் மாநில உயர்கல்வி அமைச்சரிடம் கலந்து ஆலோசிக்காமல் ஊட்டியில் இரண்டு நாட்கள் (25.04.2022 & 26.04.2022) துணைவேந்தர்கள் மாநாடு நடத்தினார். அதில் ஆர்.எஸ்.எஸ் பின்னணி கொண்ட தொழிலதிபரைச் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கச் செய்தார். அதற்கான எதிர்வினையாக அவர் துணைவேந்தர்கள் மாநாடு கூட்டிய அதே நாளில், 25.04.2022 அன்று தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை நியமிக்க மாநில அரசுக்கு அதிகாரம் அளிப்பது தொடர்பான சட்டமுன்வடிவைச் சட்டப்பேரவையில் உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி அறிமுகம் செய்தார்.



அத்துடன் ஆளுநர் தான் பங்கேற்கும் கல்வி நிறுவனங்களின் விழாக்களில் உரையாற்றும் போது போகிற போக்கில் ஆர்.எஸ்.எஸ் கருத்துகளை மாணவர்கள் மத்தியில் விதைக்கும் வேலையைச் செய்து வருகிறார். சென்னை மயிலாப்பூர் ராமகிருஷ்ணா மிஷன் மாணவர் இல்ல நூற்றாண்டு விழாவில் உரையாற்றிய ஆளுநர் ரவி "சோமநாதர் கோவில் சொத்துகளை அழித்து கந்தகார், பெஷாவர் நகரங்களை கஜினி முகமது உருவாக்கியதாகவும், அந்த நகரங்கள் அமெரிக்க குண்டுகளால் தகர்க்கப்பட்டதில் இருந்து சனாதன தர்மத்தின் வலிமையை அறியலாம் என்றும், ரிஷிகளாலும் முனிவர்களாலும் சனாதன தர்மத்தின் ஒளியினாலும் இந்த நாடு உருவாக்கப்பட்டது" என்றும் குறிப்பிட்டார்.

வேலூர் சிப்பாய் புரட்சி நினைவு தின நிகழ்ச்சியில் உரையாற்றிய ஆளுநர் ரவி "விந்திய மலையை அடிப்படையாக வைத்துத்தான் வட இந்தியா- தென் இந்தியா எனப் பிரித்தார்கள். அப்போதுதான் விந்திய மலைக்குத் தென் பக்கம் இருப்பவர்களைத் திராவிடர்கள் என அடையாளப்படுத்தினர். அதாவது ஆங்கிலேயர்கள்தான் திராவிடன் என்ற வார்த்தையை முதன் முதலில் பயன்படுத்தினார்கள்" என்று குறிப்பிட்டார். புதிய கல்விக் கொள்கை, நீட் போன்றவற்றை ஆதரித்து ஒன்றிய அரசின் குரலை அவர் தமிழ்நாட்டில் எதிரொலித்து வருகிறார்.

இந்நிலையில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 54ஆவது பட்டமளிப்பு விழா 13.07.2022 அன்று நடைபெற்றது. இது குறித்து மாநில உயர்கல்வித் துறை அமைச்சரிடமோ, அதிகாரிகளிடமோ ஆலோசிக்காமல் ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன் கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டார். இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்த உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி விழாவைப் புறக்கணித்தார். அத்துடன் விழாவுக்கான முறையான அழைப்பு மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்படவில்லை என மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினரும், மதுரை மாநகர் தெற்கு மாவட்ட தி.மு.க பொறுப்பாளருமான கோ.தளபதி தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். இதே கருத்தை மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசனும் தெரிவித்துள்ளார்.

பட்டமளிப்பு விழாவில் ஆளுநர் தனது உரையில் "திராவிடம், ஆரியம் என்பது நிலம் சார்ந்த இனப்பிரிவுதான்" என்று மீண்டும் குறிப்பிட்டுள்ளார். விழாவில் பேசிய ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன் "புதிய தேசியக் கல்விக் கொள்கை தமிழ் மொழியை ஊக்குவிப்பதாக" குறிப்பிட்டார். அத்துடன் அவரது உரை முழுவதும் மோடி புராணம்தான். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு மேடையா அல்லது பா.ஜ.கவின் பரப்புரை மேடையா என்ற ஐயம் அனைவருக்கும் ஏற்பட்டது.

முன்னதாக ஆளுநர் ஆர்.என்.ரவி வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பல்கலைக்கழக நுழைவுவாயில் அருகே சமூகநீதி மாணவர் இயக்கம், இந்திய மாணவர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் கருப்புக்கொடி காட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழக ஆளுநர் தன்னிச்சையாகச் செயல்படுவதாகக் கூறி அவர்கள் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

தமிழ்நாட்டின் ஆளுநராக ஆர்.என்.ரவி நியமிக்கப்படும் போது அவர் "1976 ஐ.பி.எஸ் பேட்ஜ்" என்று சொல்லி மாநில அரசுக்குப் பெரும் சவாலாக இருப்பார் என்ற பிம்பம் கட்டமைக்கப்பட்டது. ஆனால் அவரை "1976 மிசா பேட்ஜ்" முதல்வர் மு.க.ஸ்டாலின் கையாளும் விதம் நேர்த்தியானது. அதனால்தான் திராவிட மாடல் கண்டு அச்சமுற்று ஆளுநர் இப்படிப் போகும் இடமெல்லாம் புலம்பிக் கொண்டிருக்கிறார். இனியாவது தனது தவறுகளை உணர்ந்து ஒன்றிய - மாநிலக் கூட்டாட்சித் தத்துவத்தின் படி மாநில சுயாட்சியை மதித்து ஆளுநர் நடந்து கொள்ள வேண்டும். இல்லையேல் தமிழக மக்களால் அவர் விரட்டியடிக்கப்படும் நிலை ஏற்படும்.

●

# எதிர்ப்பும் இனிப்பும்!

சுப.வீரபாண்டியன்

சென்ற வாரம் 8,9,10 ஆகிய மூன்று நாள்களில், கோவை, திருப்பூர் ஆகிய மாவட்டங்களின் வெவ்வேறு ஊர்களில் அடுத்தடுத்துத் தொடர்ச்சியாக 10 நிகழ்வுகளில் கலந்துகொள்வது என்று முடிவெடுத்தபோது, சற்று மலைப்பாகத்தான் இருந்தது. ஆனால் கலந்துகொண்டபின் பெற்ற அனுபவங்கள் 'இதுதான் அடுத்த நகர்வு' என்னும் புது நம்பிக்கையைத் தந்தன.

பேரவையின் மாநில அமைப்புச் செயலாளர் காசு.நாகராஜனின் திட்டமிடுதலும், உழைப்பும் என்னை வியக்க வைத்தன. அவருடன் இணைந்து பேரவைத் தோழர்கள் பலரும் கடும் பணியாற்றினர். பேரவையின் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவரான சிற்பிசெல்வராஜ், மூன்று நாள்களும் என் கூடவே பயணித்து எனக்குத் துணை புரிந்தார்.

மாநகரங்கள், நகரங்கள், படித்த நடுத்தட்டு மக்கள் என்பதாகத்தான் என் சுற்றுப்பயணம் பெரிதும் அமையும். ஆனால் இம்முறை பத்து நிகழ்வுகள் பல, கிராமங்களில் அமைக்கப்பட்டிருந்தன. குறிப்பாக, திருமலையம்பாளையம், வாளவாடி, இம்மிடிப்பாளையம் ஆகிய மூன்று சிற்றூர்கள் எனக்குள் ஒரு சிந்தனை மாற்றத்தையும், புதிய புரிதலையும் ஏற்படுத்தின என்றே சொல்லலாம்.

மதுக்கரை ஒன்றியம் திருமலையம்பாளையத்திற்கு ஒரு மாலைப் பொழுதில் சென்று இரவு வரையில் இருந்தோம். தோழர்கள் சிலம்பரசன், பாலமுரளி உள்ளிட்டோர் ஒரு பள்ளியில் அவ்வூர் மக்களைத் திரட்டி அமர்த்தியிருந்தனர். ஊராட்சி மன்றத் தலைவர் கவிதாவின் தலைமையில் அச்சந்திப்பு நடைபெற்றது. பெண்கள், ஆண்கள், குழந்தைகள் வெவ்வேறு வயதில் அங்கு அமர்ந்திருந்தனர். முதலில் நம் பாடகர் கண்ணையா ஓங்கிக் குரலெடுத்துப் புரட்சிக் கவிஞரின் பாடல்கள் இரண்டினைப் பாடினார்.

முன்வரிசை முழுவதும் குழந்தைகள். சலசலவென்று பேசிக் கொண்டிருந்தனர். முதலில் அவர்களோடு நான் பேசத் தொடங்கினேன். பால்வாடியிலிருந்து நான்காம் வகுப்பு வரையிலான பிள்ளைகள் அவர்கள்! அங்கிருந்த பதாகையில் உள்ள படத்தைக் காட்டி அது யார் என்று கேட்டேன். எல்லாப் பிள்ளைகளும்



'பெரியார்' என்று உரத்துக் குரல் கொடுத்தன. எனக்கு அளவில்லாத மகிழ்ச்சி!

'தொண்டு செய்து பழுத்த பழம்' எனத் தொடங்கும் பெரியார் பற்றிய பாடலை நிதானமாக அந்தப் பிள்ளைகளிடம் சொன்னேன். பிள்ளைகள் திரும்பிச் சொன்னார்கள். மீண்டும் மீண்டும் சொல்லி அந்தப் பாடலை அவர்கள் மனங்களில் பதிய வைத்தேன். பிறகு அதே பாடலில் வரும் "அன்பு மக்கள் கடலின் மீதில்,அறிவுத் தேக்கம் தங்கத் தேரில்" என்னும் வரிகளை, உயர்நிலையில் படிக்கும் மாணவர்களிடம் சொல்லி, அதன் பொருளையும், அப்பாடல் எழுதப்பட்ட சூழலையும் எடுத்துச் சொன்னேன். அவர்கள் அத்தனை பேரும் கவனமாகக் கேட்டார்கள்.

கூடியிருந்த பெண்களை நோக்கி அவர்களுக்காகப் பெரியார் என்னவெல்லாம் செய்தார் என்பதைக் கதை சொல்வது போல் விளக்கிச் சொன்னேன். ஆர்வமாய்க் கேட்டார்கள். கவனம் திசை திரும்பாமல் அந்த மக்கள் செய்திகளைக் கேட்டுக் கொண்டபோது, பயணக் களைப்பெல்லாம் தீர்ந்து விட்டது.

மறுபடியும் உங்களைப் பார்க்க, வரும் செப்டம்பர் மாதம் வருகிறேன் என்றும், அப்போது இப்படி இல்லாமல், ஒரு நாள் முழுவதும் உங்களோடு இருப்பேன் என்றும் கூறியபோது, அங்கு எழுந்த கையொலி அன்று நான் பெற்ற புது நம்பிக்கையாக இருந்தது. கூட்டம் முடிந்து வெளியில் வரும்போது, வாசலில் என்னை வழியனுப்ப நின்ற சிறுமிகள், "தாத்தா, உண்மையா மறுபடி வருவீங்களா?" என்று கேட்டனர். கண்டிப்பா வருவேன் என்று சொன்னதும், "ஐ, ஜாலி!" என்று குரல் எழுப்பினர். அந்த ஒலி , ஆயிரம் பாராட்டுகளுக்குச் சமம் என்று தோன்றியது.

அன்று இரவு திமுகவைச் சேர்ந்த, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பேரூர் நடராசன் அவர்களின் மகள் ராணி சித்ரா வீட்டில் அன்பான வரவேற்பும், இரவு விருந்தும்!

மறுநாள் வாளவாடி! உடுமலைப் பேட்டைக்கு அருகில் உள்ள ஊர். திருமூர்த்திமலைக்குச் செல்லும் வழியில் உள்ளது. அந்தக் கிராமத்திற்குள் நுழையும்போதே, மகிழ்ந்து வரவேற்ற தோழர்கள், 'நேற்றிலிருந்து ஒரே போராட்டம்' என்றனர். எனக்குப் புரியவில்லை. என்ன போராட்டம் என்று கேட்டேன். தோழர் நாகராஜன் விளக்கினார். அங்குள்ள ஒரு மண்டபத்தில் நாங்கள் உரையாற்றுவதாக ஏற்பாடு. அந்த மண்டபத்தில் என்னைப் பேச அனுமதிக்கக்கூடாது என்றும், மீறி அனுமதித்தால், எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடக்கும் என்றும், அந்த ஊரில் புதிதாய்ப் புறப்பட்டிருக்கும் பாஜகவினர் மிரட்டினார்களாம். மண்டப உரிமையாளர்கள் கொஞ்சம் பயந்து விட்டார்கள்.

'அவர் கடவுள் இல்லை என்று பேசுவாராம். எனவே கூட்டம் நடத்த அனுமதியில்லை' என்று சொல்லி,

தொடர்ச்சி அடுத்த பக்கம்

## முன்பக்கத் தொடர்ச்சி

முன்பணத்தையும் திருப்பிக் கொடுத்துள்ளனர். திமுக நண்பர்கள் தலையிட்டு அனுமதி பெற்றுள்ளனர். எதிர்ப்பும் நல்லதாக ஆகிவிட்டது. நான் அந்த ஊருக்கு அன்றுதான் முதன்முதலில் செல்கிறேன், அங்கு யாருக்கும் என்னைத் தெரியாது. ஆனால் அன்று பெரும் கூட்டம். அரங்கம் நிரம்பி வழிந்தது.

சிற்பியும், நாகராஜனும் தங்கள் உரையில் நியாயமான கோபத்தை வெளிப்படுத்தினர். எனக்கும் அது நல்ல வாய்ப்பாக ஆயிற்று. பாஜக கூட்டம் எப்படி ஜனநாயகத்திற்கு எதிரானது என்பதையும், இன்று நடக்கும் தளபதியின் ஆட்சி எப்படியெல்லாம் மக்களுக்கு நன்மை செய்து வருகிறது என்பதையும் விரிவாக எடுத்துக் கூறினேன். ஏறத்தாழ 50 நிமிடங்கள் அன்று ஆற்றிய உரையை அந்த ஊர் மக்கள் விரும்பிக் கேட்டனர். ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்த தோழர்கள் உடுமலை நாககுமார், கண்ணப்பன், விஜய்சங்கர், ரிஷி ஆகியோர் முகங்களில் மகிழ்ச்சியைப் பார்க்க முடிந்தது! திமுகவின் உடுமலை வேலுச்சாமி உரைகள் முழுவதையும் செவிமடுத்தார். கூட்டம் முடியும் தருணத்தில், திமுக மாவட்டப் பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஜெயராம் கிருஷ்ணன் வந்து வாழ்த்தினார்.

பிறகு, மறுநாள் காலையில் , கிணத்துக்கடவு அருகில் உள்ள இம்மிடிபாளையம் என்னும் சிற்றூர். ஊராட்சி மன்ற உறுப்பினர்களும், அவ்வூர் மக்களும் கூடியிருந்தனர். அந்த மக்களைப் பார்க்கும்போதே அவர்களின் வறுமை வெளிப்படையாகத் தெரிந்தது. பெரியார் மணி என்னும் தோழர் அவர்களுக்காக உழைக்கின்றவராக, அந்த ஊரிலேயே வாழ்கின்றவராக இருந்தார். அவர்தான் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

அவர்கள் ஏதும் கேட்காமலேயே, அந்த ஊர்ப் பிள்ளைகளின் கல்விக்கு எங்கள் அமைப்பினால் முடிந்ததைச் செய்கிறோம் என்று உறுதியளித்தேன். அவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சி. அருந்ததிராய் என்னும் ஒரு சிறுமி ("அந்த ஊரில் அப்படி ஒரு பெயர் என்பது வியப்பாக இருந்தது), "எங்கள் ஊர்ப் பள்ளிக்கூடத்தில், பாடப்புத்தகம் தவிர, சீருடை, உபகரணங்கள், காலணி எதுவும் வழங்கப்படவில்லை" என்று கூறினார். எல்லாவற்றையும் செய்துகொடுக்கும் அதிகாரம் எதுவும் நம்மிடம் இல்லையென்றாலும், அதிகாரம் உள்ளவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் வாய்ப்பு நமக்கு உள்ளது. எனவே உயர் கல்வி அதிகாரிகளின் பார்வைக்கு அதனைக் கொண்டு செல்ல முடிவெடுத்தேன்.

ஊரில் அருந்ததியர் மக்கள்தான் கூடுதல் எண்ணிக்கையில் உள்ளதாகக் கூறினர். இதுபோன்ற ஓரிரு கிராமங்களையாவது, நம் சொந்தக் கிராமம் போல் எண்ணி, அந்த மக்களுக்கு இயன்றதைச் செய்திட வேண்டும் என்று நெஞ்சுக்குள் ஓர் உறுதி ஏற்பட்டது.

அடுத்து, கிணத்துக்கடவில் நடைபெற உள்ள தூய்மைத் தொழிலாளர்களுக்கு விருது வழங்கும் விழாவிற்குச் செல்ல வேண்டிய அவசரத்தில் இருந்தோம். அந்த மக்கள் எங்கள் அனைவரோடும் சேர்ந்து ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் தேநீர் அருந்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். அவர்களின் அன்பிற்கு இணங்கினோம்.

எனக்குச் சர்க்கரை இல்லாத தேநீர் வேண்டும் என்று கேட்டேன். கொடுத்தார்கள். ஆனாலும் அது இனித்தது!

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## இவையென்ன "கெட்ட" வார்த்தைகளா!

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் ஜூலை 18 ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 13 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

இந்த நிலையில் ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் பயன்படுத்தக் கூடாத சொற்கள் (unparliamentary words) என்று ஒரு கையேட்டை வெளியிட்டு உள்ளது.

அதில், துரோகம், ஊழல், ஒட்டுக்கேட்பு, கொரோனா பரப்புபவர், நாடகம், கபட நாடகம், அராஜகவாதி, சகுனி, சர்வாதிகாரம், சர்வாதிகாரி, அழிவு சக்தி, காலிஸ்தானி, இரட்டை வேடம், பயனற்றது, நாடகம், ரத்தக்களரி, குரூரம், கோழை, கிரிமினல், முதலைக் கண்ணீர், அவமானம், கழுதை, கண்துடைப்பு, ரவுடித்தனம், போலித்தனம், தவறாக வழிநடத்துதல், பொய் என்று unparliamentary words பட்டியல் நீள்கிறதாகக் கண்டனங்கள் எழத்தொடங்கி விட்டன.

இவை என்ன 'கெட்ட' வார்த்தைகளா? தனி மனித உரிமையை, சமூகத்தை, நாட்டைப் பாதிக்கும் தேசவிரோதச் சொற்களா?

மக்கள் சாதாரணமாகவே அன்றாடம் பயன்படுத்தும், புழக்கத்தில் இருக்கும் சொற்கள்தாமே இவை.

ஒன்றிய அரசின் கேலிக்கூத்தான இந்தச் செயலுக்குக் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டெரிக் ஓ பிரைன், "ஒன்றிய அரசு தடை செய்திருக்கும் அத்தனை வார்த்தைகளையும் நாடாளுமன்றத்தில் நான் பேசுவேன். என்னைக் கைது செய்து கொள்" என்று கண்டனம் தெரிவித்திருக்கிறார். இன்னொரு உறுப்பினர் "சங்கி" என்ற சொல்லைத்தான் இவர்கள் விட்டு வைப்பார்கள் போலிருக்கிறது என்று கேலியாகப் பேசியிருக்கிறார்.

இந்நிலையில் இது குறித்து எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தும் என்பதால் நாடாளுமன்ற வளாகத்தில், முக்கியமாகக் காந்தியார் சிலை முன்பு போராட்டம், ஆர்ப்பாட்டம் நடத்தத் தடை விதித்திருக்கிறது நாடாளுமன்றச் செயலகம்.

இது ஜனநாயக நடைமுறைதான் என்று சொல்லும் ஓம் பிர்லா, நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் பேச எந்தத் தடையும் விதிக்கவில்லை என்றும் பட்டும் படாமலும் பேசியிருக்கிறார்.

இது ஜனநாயக நாடு என்று சொல்லிக் கொண்டு இருந்தால் போதாது. அப்படிப்பட்ட அரசாக இருக்க வேண்டும்.

இட்லர், முசோலினி, ராஜபக்சே சகோதரர்களின் சர்வாதிகாரங்களை மக்கள் தூக்கி வீசியிருக்கிறார்கள்.

இதை ஆளவந்தார்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

# திராவிட நட்புக் கழகம்

## வளைகுடா நாடுகளின் பொறுப்பாளர்கள்

★ அமீரகம் (துபாய்)
**அன்வர் அலி MBA**

மத்திய மண்டலம்
**ஜவகர் சவரிமுத்து MSc, MBA**

கிழக்கு மண்டலம்
**சீனி முஹம்மது MBA, MA**

தெற்கு மண்டலம்(நஜ்ரான்)
**முனைவர் ஆனந் தேவதுறை Ph.D**

மேற்கு மண்டலம்
**லயன் ஆர்.எஸ்.ஜாஹிர் ஹுஷேன் M.Com, ADHM**

தெற்கு மண்டலம்(அபாஹா)
**முனைவர் நூஹு அப்துல்லா Ph.D**

★ பஹ்ரைன்
**கவிஞர், எழுத்தாளர் அப்துல் கையூம் Mcom**

★ கத்தார்
**பாலாஜி பாலா B.E**

★ ஓமன்
**கரிகாளன் B.E**

★ கத்தார்
**பாலாஜி B.E**

★ பஹ்ரின்
**கவிஞர் அப்துல் கையூம் Mcom**

★ குவைத்
**சித்தார்த்**

★ Velukudi (ஓமன்)
**மஹாலிங்கம் கரிகாலன் B.Tech**

★ சவூதி
**A ராமத்துல்லா BE**

---

**ஆ.சிங்கராயர்,**
ஒருங்கிணைப்பாளர்,
**திராவிட நட்புக் கழகம்**

★ **நீங்கள் எந்தப் பக்கம்?**
- பேரா. சுப.வீரபாண்டியன்

★ **பச்சைத் துரோகம்**
- ஆழி.செந்தில்நாதன்

★ **திராவிடத் தமிழ்த் தேசியம்**
- வாலாசா வல்லவன்

★ **திராவிடம் சுயமரியாதை சமூகநீதி** (தொகுப்பு)

★ **தமிழ்த் தேசிய அரசியலைச் சிதைக்கும் பார்ப்பனியக் கங்காணிகள்**
- பொழிலன்

★ **ஆரிய மாயை - சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் - நீதிதேவன் மயக்கம்**
- அறிஞர் அண்ணா

★ **கருவறை நுழைவும் சாதி ஒழிப்பும்**
- முனைவர் வெ.சிவப்பிரகாசம்

## கருஞ்சட்டைப் பதிப்பகம்

**இணையத்தள விற்பனை (online sales)**

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : karunchattaibooks.com

# அ.தி.மு.க துடுப்பில்லாப் படகு!

**பொள்ளாச்சி மா. உமாபதி**




அ.தி.மு.கவுக்கு யார் தலைவரானால் என்ன, யார் பொதுச்செயலாளர் ஆனால்தான் நமக்கென்ன? அது அ.தி.மு.கவின் உட்கட்சி விவகாரம். அதில் நாம் கருத்துச் சொல்ல எதுவும் இல்லை. ஆனால் எந்தத் தொடர்பும் இன்றி எடப்பாடி பழனிச்சாமி அ.தி.மு.கவின் குளறுபடிகளுக்கும் சிக்கல்களுக்கும் சண்டை சச்சரவுகளுக்கும், தி.மு.கதான் பின்னணியில் இருக்கிறது என்கின்ற தேவையற்ற, தொடர்பற்ற, உண்மையற்ற செய்திகளைக் கூறும்போது அதற்கு நாம் பதில் சொல்ல வேண்டிய கடமையும், நடப்பு உண்மைகளைத் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பும் நமக்கு இருக்கிறது.

இன்றைக்கு அரசியல் உலகில் நகைப்புக்கு ஆளாகி இருக்கும் அ.இ.அ.தி.மு.க கட்சி தொடங்கிய காலத்திலேயே கொள்கை கோட்பாடுகளுக்காக, லட்சிய உணர்வோடு, நல்ல நோக்கத்தோடு தொடங்கப்பட்ட கட்சி அல்ல என்பது தெரிந்ததுதான். இந்திய அரசியல் அரங்கில் தனிப்பெரும் கட்சியாக ஒரு மாநிலக் கட்சி வளர்ந்து விடக்கூடாது என்று மத்தியில் ஆண்ட காங்கிரஸ் கட்சி நினைத்ததால் வருமானவரித்துறை அன்னிய செலாவணி சட்டங்களைக் காட்டி மிரட்டி தி.மு.கழகத்தின் பொருளாளரைப் பிரித்தெடுத்துத் தொடங்கப்பட்ட கட்சிதான் அ.தி.மு.க.

மிசா நெருக்கடி காலத்தில் மாநிலக் கட்சிகளை இந்திரா காந்தி அம்மையார் முடக்கி விடுவார் என்கிற எண்ணம் ஏற்பட்டபோது, கட்சியின் பெயரையே எம்ஜிஆர் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று மாற்றிக்கொண்டார்.

அ.தி.மு.க ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள கட்சி என்று சொல்லிக் கொண்டாலும் அது எம்ஜிஆர், ஜெயலலிதா போன்றவர்களின் சர்வாதிகாரச் சிந்தனைகளால் நடத்தப்பட்டது.

ஆனால் இப்போது எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் இடையே ஏற்பட்டுள்ள போட்டி அதிமுகவை பல்வேறு சிக்கல்களில் சிக்க வைத்துள்ளது. நடைமுறையில் தொண்டர்களிடம் வாக்குப் பெறுவது இயலாத செயலாக உள்ளது. “சித்தன் போக்கு சிவன் போக்கு” என்று பொத்தாம் பொதுவாக கட்சியின் விதிகளை ஏற்படுத்தியதன் விளைவு இது .

அதிமுகவில் திடீரென ஜெயலலிதாதான் நிரந்தரப் பொதுச் செயலாளர் என்றார்கள். அந்த ஜெயலலிதாவே நிரந்தரமின்றிப் போன பின் முதலில் சசிகலாவை பொதுச் செயலாளர் என்றார்கள். பொதுச் செயலாளர் ஆன கையோடு ஊழலுக்காக அவர் சிறை சென்றதால் அந்த இடத்திற்கு ஒருங்கிணைப்பாளர் துணை ஒருங்கிணைப்பாளர் என இருவரை நியமித்தனர் .

அவர்கள் இருவரும் சேர்ந்து ஒரு நாளில் பொதுக்குழுவைக் கூட்டி அந்தப் பொதுக்குழுவில் இயற்றப்பட வேண்டியத் தீர்மானங்களைத் தீர்மானக்குழு வடித்தெடுத்துத் தந்தது. தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டிய பொதுக்குழு, தீர்மானங்கள் அனைத்தும் நிராகரிக்கப் படுகின்றன என்று முடிவு எடுத்தது.

பொதுக்குழுவைக் கூட்டுகின்ற நேரத்திலேயே துணை ஒருங்கிணைப்பாளர் பொதுக்குழு நடக்க வேண்டும் என்கிறார். ஒருங்கிணைப்பாளர் பொதுக்குழுவே நடக்கக்கூடாது என்று தடை வாங்க முயற்சி செய்கிறார்.

பொதுக்குழு நடத்த ஒப்புதல் தந்த உயர் நீதிமன்றம் வடித்தெடுக்கப்பட்ட 23 தீர்மானங்களைத் தவிர வேறு எந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றக்கூடாது என்று ஆணை பிறப்பிக்கிறது. ஆனால் அந்தப் பொதுக்குழுவில் வடித்தெடுக்கப்பட்டத் தீர்மானங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டுக் கழகத்தின் அவைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இது உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டலுக்குப் புறம்பானது.

ஆக “அவைத் தலைவர் தேர்வு கூட செல்லுமா?” என்கின்ற கேள்வி எழுகிறது. அப்படி முழுமையாக அங்கீகரிக்கப்படாத அவைத்தலைவர் ஜூலை 11ஆம் தேதி புதிய பொதுக்குழு கூடும் என்கிறார். அப்படி ஜூலை 11ஆம் தேதி பொதுக்குழு கூடுகின்ற நேரத்தில் முன்னாள் ஒருங்கிணைப்பாளரும், பொருளாளரும், எதிர்க்கட்சி துணைத் தலைவருமான ஓ. பன்னீர்செல்வம் அதிமுக தலைமை அலுவலகத்திற்குள் அ.தி.மு.கவின் தொண்டர்கள் எனப்படும் குண்டர்களுடன் நுழைந்து அங்குள்ள அறைக்கதவுகளின் பூட்டுகளை உடைத்து அலுவலகத்தில் இருந்த முக்கியக் கோப்புகளை அள்ளிச் சென்று விடுகிறார். “இது ஒரு கண்ணியமான தலைவனின் செயலா?” என்ற கேள்வி எழும்போது அப்படி ஒரு கண்ணியமான கட்சிக்கு இப்படி ஒரு கண்ணியமான தலைவர்தான் கிடைப்பார் என்கின்ற பதில்தான் கிடைக்கிறது .

அதிமுகவில் உட்கட்சித் தேர்தல் என்றைக்காவது முறையாக நடந்தது உண்டா?

ஆனால் அடிப்படைத் தேர்தலே நடைபெறாமல் தலைமையால் நியமிக்கப்படுகிற பொதுக்குழு உறுப்பினர்கள் யார் என்கின்ற வரையறை அதிமுகவில் கிடையாது. பொதுக்குழு உறுப்பினர்கள் நிலையே இது என்றால் அடிப்படை உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும் என்பது கேலிக்கூத்தான ஒன்று.

இபிஎஸ் வகையறாவைக் கட்சியிலிருந்து நீக்குகிறார் ஓபிஎஸ். ஓபிஎஸ் வகையறாவைக் கட்சியிலிருந்து நீக்குகிறார் இபிஎஸ். ஓபிஎஸ், இபிஎஸ் இரண்டு வகையறாக்களையும் சசிகலா கட்சியிலிருந்து நீக்குகிறார்.

நல்ல கட்சி, நல்ல தலைமை, நல்ல பொதுக்குழுக் கூத்துகள்.

ஒரு பொதுக்குழுவை முறையாகக் கூட்டி, கட்சியை வழிநடத்தத் தெரியாத எடப்பாடி, ஓ.பி.எஸ் வகையறாக்கள் பா.ஜ.க வின் அடிமைகளாக இருந்து விட்டுப் போகட்டும்.

அதற்காக எதெற்கெடுத்தாலும் தி.மு.க.... தி.மு.க என்று ஏன் அலற வேண்டும். அவர்களின் கட்சி அலுவலகம் ஓ.பி.எஸ். கூட்டத்தால் உடைக்கப்பட்டால், இதற்குப் (ஓ.பி.எஸ்) பின்னணியில் தி.மு.க இருக்கிறது, ஸ்டாலின் இருக்கிறார் என்ற எடப்பாடியின் கூச்சல் அர்த்தமற்றது.

இன்று உலகமே பார்த்து வியப்படைகிறது தமிழக முதல்வர், தளபதி ஸ்டாலின் அவர்களின் நிர்வாகத் திறமையைக் கண்டு. இதில் அ.தி.மு.கவை நினைக்க, தி.மு.கழகத்திற்கு நேரம் ஏது? தி.மு.கழகத்தின் மீது பழிதூற்றும் எடப்பாடி உள்ளிட்டோர், இரட்டை இலையைக் காப்பாற்றப் பார்க்கட்டும்.

சூரியனைப் பார்த்து வாய் பிளக்க வேண்டாம். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian